26.02.2026

அ.வ.எண். 5/2021

பி.சா.1 – திரு. தங்கவேலு, த/பெ. பழனிச்சாமி

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 26.02.2026 is accordance with the provision of Act X of 3331

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. பி.சா.ஆ.3 பாகபாத்திய விடுதலை பத்திரத்தில் உள்ள பக்கம் 6 மற்றும் 7 ல் உள்ள தோராய பட்டா மற்றும் வரைபடத்தை அடிப்படையாக கொண்டு பி.சா.ஆ.3 ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். அளவீடு தவறாக உள்ளது. அளவீடு 4.2 மீ விடுபட்டுள்ளது. பி.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள அளவுகளை மாற்றினால் மேற்படி ஆவணத்தில் உள்ள சொத்தின் அளவுகளில் மாற்றம் ஏற்படும் என்றால் மாறாது, பரப்பளவு சரியாக உள்ளது, அளவுகளை குறிக்க மறந்துவிட்டனர். புலப்படத்தில் அளவுகள், விஸ்தீரணம் சரியாக உள்ளது.

2. பி.சா.ஆ.3 ஆவணம் வாங்கிய பிறகு தான் நான் வீடு கட்டினேன் என்றால் சரிதான். எனது எதிர் வழக்குரையில், 13 வது பாராவில், 2 வது வரியில், மேற்படி இடம் வாதியின் தென்புற சுவற்றில் இருந்து 2 அடி அளவிற்கு பிரதிவாதியின் இடம் உள்ளது என குறிப்பிட்டுள்ளேன் என்றும், அது எந்த க.ச.எண்ணில் உள்ளது என குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. 2 அடி இடம் உள்ளதற்கு, ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் என்னுடைய புலப்படம் தாக்கல் செய்துள்ளேன். வாதிகளின் புலப்படத்தையும் தாக்கல் செய்துள்ளேன்.

3. பி.சா.ஆ.4 தான செட்டில்மெண்ட் ஆவணமானது 11.07.2019 ல் ஏற்படுத்தப்பட்டது. எதிர் வழக்குரையை 07.12.2021 தாக்கல் செய்துள்ளேன் என்றும், நான் என்னுடைய சொத்தை என்னுடைய மகனுக்கு தானம் எழுதி கொடுத்த பின்னிட்டு என்னுடைய சொத்தை வாதி ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. பி.சா.ஆ.5 பிழைதிருத்தல் ஆவணம் வழக்கு நிலுவையில் இருந்தபோது ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். அப்போது அளவுகள்

குறித்து மாறுபாடு உள்ளது என மேற்படி ஆவணத்தை தயார் செய்த வழக்கறிஞரிடம் சொன்னேனா என்றால் நினைவில்லை. எதிர் வழக்குரையை தயார் செய்ய நான் தான் தகவல் சொன்னேன் என்றால் ஆமாம். எதிர் வழக்குரையில் சொல்லியுள்ள ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்யவில்லை என்றால் நினைவில்லை.

5. தாவா 1ம் அயிட்ட சொத்தை, சின்னன்னன் என்பவரிடம் இருந்து வாதிகள் கிரயம் பெற்றனர் என்றால் தெரியாது. வா.சா.ஆ.15 காவல் நிலைய புகாரின் பேரில் 04.12.2020 ல் நான் காவல் நிலையத்தில் ஆஜரானேனா என்றால் ஆமாம். நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதாக சொன்னதால் நீதிமன்றத்தில் பார்த்துகொள்ளும்படி சொன்னார்கள். மேற்படி புகாரில் நான் 3 அடி X 50 அடி நிலத்தை ஆக்கிரமிப்பு செய்ததாக உள்ளது என்றால் நான் மறுக்கிறேன். வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு, வழக்கின் ஆவணங்களை கொடுத்து என் வழக்கறிஞரை பார்த்தேன் என்றால் ஆமாம்.

6. நான் பஞ்சாயத்து அனுமதியை கொண்டு வந்துள்ளேனா என்றால் இல்லை. 2ம் பிரதிவாதி, IA.No.7/2022 என்ற மனுவில், வாதி மற்றும் பிரதிவாதியின் சொத்தை அளக்க மனுத்தாக்கல் செய்த விவரம் பற்றி தெரியுமா என்றால் தெரியும். மேற்படி மனுவை மேற்கொண்டு தொடராமல் எனது வழக்கறிஞர் Not Press செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி நீதிமன்ற ஆணையர் மனுவின் நிலையை தெரிந்துகொண்டேனா என்றால் நினைவில்லை. நீதிமன்ற ஆணையர் மூலம் சொத்தை அளந்தால் எனக்கு சாதகமாக இருக்காது என்பதால் மேற்படி மனு Not Press செய்யப்பட்டது என்றால் மறுக்கிறேன்.

7. வாதி தாக்கல் செய்த IA.No.3/2021 மனுவின் பெயரில் நியமிக்கப்பட்ட நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு நான் மட்டும் ஆட்சேபணை செய்தேன் என்றும், எனது மகனான 2ம் பிரதிவாதி ஆட்சேபணை செய்யவில்லை என்றால் நினைவில்லை. வழக்குரையில் கதவு எண் குறிப்பிடப்படப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது வாதியினுடையதா என்று தெரியாது. வழக்கு தாக்கல் செய்த உடன், 2ம்பிரதிவாதிக்கு தகவல் சொன்னேனா என்றால் இல்லை. மேற்படி வழக்கு

விவரங்களை என் மகனுக்கு சொல்லிவிட்டு எதிர் வழக்குரையை தாக்கல் செய்து விட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.3 ஆவணத்தில், உள்ள வரைபடத்தில், வடபுறம் கிழமேலாக – 14.4 மீ, தென்புறம் கிழமேலாக – 15.8 மீ குறிப்பிடப்பட்டுள்ளது. நாளது தேதியில் எனது பெயரில் பட்டா எண்.886 பொறுத்து எவ்வித சொத்தும் இல்லை என்றால் சரிதான். என் மகனுக்கு கொடுத்துள்ளேன்.

8. தான செட்டில்மெண்ட்டில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் என் மகன் எத்தனை ஆண்டு காலம் வசித்து வருகிறார் என்றால் என் மகன் வெளி மாநிலத்தில் வேலை செய்கிறார். மேற்படி ஆவணம் எழுதும்போது வெளிமாநிலத்தில் இருந்தாரா என்றால் ஆமாம், விடுமுறையில் வந்து செல்வார். பி.சா.ஆ.3 மற்றும் 4 ஆவணங்களில் சொத்து விவரத்தில், செக்குபந்தியில் க.ச.எண்.955/1 நெம்பர் நத்தத்திற்கும், பொதுப்பாதைக்கும் தெற்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு கொடுத்த ஆட்சேபணையில், க.ச.எண்.956/3 ல் பொதுத்தடம் உள்ளது என்று சொல்லியுள்ள விவரத்தை எனது எதிர் வழக்குரையில், குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சாட்சி எதிர் வழக்குரையை படித்து பார்த்துவிட்டு ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்று சாட்சியம் அளிக்கிறார்.

9. எதிர் வழக்குரையில் சொல்லாத விவரங்களை ஆணையர் அறிக்கையின் ஆட்சேபணையில் சொல்லியுள்ளது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. பி.சா.ஆ.2 புலப்படத்தில் கிழபுறத்தில் 9.6 மீ உள்ளது என்றால் சரிதான். 1990 ம் ஆண்டு குட்டியம்மாள் பத்திரத்தில் தென்வடல் இருபுறமும் - 44 அடி என சொல்லப்பட்டுள்ளது, அது மீட்டர் அளவில் சுமார் 13.4 மீ அளவில் வரும். வாதி அளவை மாற்றி எங்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளனர். க.ச.எண்.956/3 ல் பொதுத்தடம் உள்ளதற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் வாதியின் புலப்படம் தாக்கல் செய்துள்ளேன், அதில் பாதை உள்ளது.

10. க.ச.எண்.956/3 ல் எனது பெயரில் பட்டா இல்லை என்றால் சரிதான். ஆனால் வாதிகள் பொதுப்பாதையாக உள்ளதை மனைக்கட்டு என்று பட்டா

பெற்றுள்ளார்கள். அது சம்மந்தமாக வருவாய் கோட்டாட்சியர், கோவை தெற்கு அவர்களிடம் மனு நிலுவையில் உள்ளது. பட்டா சம்மந்தமாக வருவாய் கோட்டாட்சியர், கோவை தெற்கு அவர்களிடம் மனு நிலுவையில் உள்ளது பற்றி எதிர் வழக்குரையில் மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் நீதிமன்ற ஆணையர் அறிக்கை கொடுத்த பின்னிட்டு அதில் குறைபாடு இருப்பதால் அதை நிவர்த்தி செய்ய கோரி மனு கொடுத்து விசாரணை நிலுவையில் உள்ளது. அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

11. அ-பதிவேட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். அது எத்தனையாவது ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் நினைவில்லை. நான் அவ்வாறு தாக்கல் செய்யவில்லை என்றும், பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.5 பிழைதிருத்தல் ஆவணத்தில், செக்குபந்தியில் க.ச.எண்.956 நம்பர் நத்தத்திற்கும் வடக்கு என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.3 மற்றும் 4 ஆவணத்தில் உள்ளவாறு பி.சா.ஆ.5 பிழைத்திருத்தல் பத்திரம் மற்றும் பி.சா.ஆ.7 உறுதிமொழி பத்திரத்தில் செக்குபந்தி இல்லை என்றால் சரிதான். அதில் குறைபாடு இருந்ததால் புலப்படம் பெற்று பிழைத்திருத்தல் பத்திரம் ஏற்படுத்தப்பட்டது. குறிப்பாக 4.2 மீ என்பது விடுபட்டுள்ளதால் அதை சரிசெய்யும் பொருட்டு ஆவணம் பெற்று பிழைதிருத்தல் செய்யப்பட்டது.

12. பி.சா.ஆ.3 ஆவணத்தை எழுதி கொடுத்த எனது தங்கை செல்வி அவர்களை அழைத்து சொத்து விவரத்தில் உள்ள பிழையை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல, அவரை சாட்சியாக அழைத்து பிழைதிருத்தல் பத்திரம் ஏற்படுத்தவில்லை என்றால் குடும்ப பிரச்சனை காரணமாக தர மறுத்துவிட்டார். பி.சா.ஆ.6 நத்தம் நில வரி திட்ட தூய பதிவேடு ஆவணத்தில், க.ச.எண்.956/3 என்பது மனைக்கட்டாக உள்ளது என்றால் தவறு. அதை திருத்தம் செய்ய வருவாய் கோட்டாட்சியரிடம் மனு கொடுத்து விசாரணையில் உள்ளது. நான் வீடு கட்டிய பின்னிட்டு தான், பி.சா.ஆ.4 தான செட்டில்மெண்ட் மற்றும் பி.சா.ஆ.5 பிழைதிருத்தல் பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்றால் இல்லை.

13. பி.சா.ஆ.3 ஆவணத்தில் வடபுறம் 5.2 மீ என்ற அளவு இல்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் இல்லாததால் பிழைதிருத்தல் பத்திரம் ஏற்படுத்தப்பட்டது. பி.சா.ஆ.3 ஆவணத்தில் பக்கம் 7ல் உள்ள வரைபடத்தில், க.ச.எண்.955/3 என்று மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், பொதுப்பாதை என்ற விவரம் இல்லை என்றால் சரியாக சொல்ல முடியவில்லை. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் கண்டவாறு என்னுடைய வீடு உள்ளதா என்றால் ஆமாம். **பிரதிவாதியின் வீட்டின் புகைப்படம் (5 எண்ணிக்கைகள்) மற்றும் ரசீது வா.சா.ஆ.29** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வேண்டுகோளின் படி ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur